**செய்தி வெளியீடு எண் : 279** **நாள் : 10.02.2023**

**<u>திட்டங்களின் வெளிப்பாடு மற்றும் அவற்றின் பயன்களை கண்காணிப்பதற்கான வரையறை உருவாக்குதல் தொடர்பான பணிப்பட்டறை தமிழ்நாடு அரசால் 09.02.2023 மற்றும் 10.02.2023 அன்று நடத்தப்பட்டது.</u>**

இந்திய ஒன்றிய அரசின் நிதி ஆயோக் அமைப்பின் கீழ் இயங்கி வரும் ஒரு அலுவலகமான, டெவலப்மென்ட் மானிட்டரிங் அன்ட் எவால்யுவேஷன் அலுவலகம், புதுதில்லி, (Development Monitoring and Evaluation Office (DMEO)), தேசிய வளர்ச்சி திட்டத்திற்கு உதவிடும் விதமாக, ஒன்றிய அரசின் திட்டங்களின் செயல்பாடுகளை கண்காணிப்பது மற்றும் மதிப்பீடு செய்து வரும் ஒரு தன்னாட்சி பெற்ற இணைப்பு அலுவலகமாகும். திட்டங்களின் விளைவுகளை கண்காணிக்கும் பொருட்டு, இந்த அலுவலகத்தால் ஒன்றிய அரசின் திட்டங்கள் மற்றும் ஒன்றிய அரசின் நிதியுதவி பெறும் திட்டங்களின் செயலாக்கங்களின் வெளிப்பாடு மற்றும் பயன்களை கண்காணிப்பதற்கான ஒரு வரையறை (Output Outcome Monitoring Framework) உருவாக்கியுள்ளது.

இந்த வரையறையை பின்பற்றி மாநிலத் திட்டங்களுக்கான வரையறையை உருவாக்குவதற்காக நீடித்த வளர்ச்சி இலக்குகளுடன் தொடர்புடைய துறைகள் ஏற்கனவே அரசால் வலியுறுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக கடந்த ஓராண்டில் பல்வேறு நிலையிலான ஆலோசனைக் கூட்டங்கள் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையால் நடத்தப்பட்டுள்ளது.

இந்த வரையறையை மாநில அரசின் திட்டங்களுக்காக சிறப்புடன் உருவாக்குவதற்காக, மாநில அரசு அலுவலர்களுக்காக, Development Monitoring and Evaluation Office அமைப்பின் நிபுணத்துவம் பெற்ற அலுவலர்களைக் கொண்டு, இரண்டு நாள் பணிப்பட்டறை தமிழ்நாடு அரசின் திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் கீழ் இயங்கும் பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால், அண்ணா நிர்வாகப் பணியாளர்கள் பயிற்சி கல்லூரியில் 09.02.2023 மற்றும் 10.02.2023 ஆகிய

தேதிகளில் நடத்தப்பட்டது. இந்த பணிப்பட்டறையை திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் அரசு சிறப்புச் செயலாளர் திரு. த.சு. இராஜ்சேகர், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார் இப்பணிப்பட்டறையில் கற்கும் அம்சங்களை கொண்டு ஒவ்வொரு துறையும் அத்துறைகளால் செயல்படுத்தப்படும் திட்டங்களுக்கான கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு வரையறையை சிறந்த முறையில் உருவாக்கி அரசுக்கு அளித்திட அறிவுறுத்தினார். நீடித்த வளர்ச்சி இலக்குகளுக்கு தொடர்புடைய துறைகளிலிருந்து உயர் அலுவலர்கள் இப்பணிப்பட்டறையில் பங்கு பெற்றனர். முனைவர் பி. விஸ்வநாதன், இயக்குநர்–தமிழ்நாடு மாநில புள்ளியியல் பயிற்சி நிலையம், பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை மற்றும் முனைவர் ந. அனிதா, குழுமத் தலைவர் (கல்வி (ம) வேலைவாய்ப்பு), மாநிலத் திட்டக்குழு ஆகியோர் இப்பணிப்பட்டறை தொடர்பாக மாநில அரசு துறை அலுவலகங்கள் மற்றும் DMEO அலுவலகத்துடனான ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொண்டனர். இப்பணிப்பட்டறையில் 49 துறைத் தலைமை அலுவலகங்களிலிருந்து அலுவலர்கள் பங்குபெற்றனர்.

**அரசு சிறப்பு செயலாளர்,**
**திட்டம் மற்றும் வளர்ச்சித்துறை**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in